# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை, பாதுகாப்பு அமைச்சிற்கு ஐந்து வருடங்களுக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துதல்

## Contract No.: MOD/SUP/08/02/01/2023

1. இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்காக ஐந்து வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   கொள்முதல் செய்ய வேண்டிய வாகனங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் பின்வருமாறு:

| பெறுகை குறிப்பீடு | வாகனங்களின் விளக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| MOD/SUP/08/02/01/2023 | இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்காக ஐந்து வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துதல் | 09 எண்ணிக்கை | 1,620,000.00 | 25,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112430860-9 (நீடிப்பு 10504), என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, 011-2 433517 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக, **modsupplysl@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சு, வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்று 20-23.06.12 ஆம் திகதியிலிருந்து 2023.07.04 ஆம் திகதி வரையும் பொது மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

4. மேலேயுள்ள பெறுகைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்கள் சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வர்த்தக பெயர்கள் நியதிச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக பெயர் கட்டளைச்சட்டத்தின் (49 ஆம் அத்தியாயம்) கீழ் வழங்கப்பட்ட கம்பனியொன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க (படிவம் 48) பணிப்பாளர்களின் 17 ஆம் இலக்க சட்டத்தின் விபரங்களினதும் பிரதியொன்றையும் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவின் மூலப்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் நலன்களின் மோதலை கொண்டிராமலும் விலைமனுதாரரின் பெயரானது தேசிய பெறுகை முகவராண்மை / ஆணைக்குழுவினால் தடைசெய்யப்பட்ட கம்பனிகளின் பட்டியலில் சேர்க்கப்படாமலுமிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் இலங்கை ரூபா தவிர்ந்த ஏனைய நாணயங்களில் விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்காமலும் இருப்பதுடன் நிபந்தனையுள்ள விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ளன.

5. 2023.06.12 ஆம் திகதியிலிருந்து 2023.07.04 ஆம் திகதி வரையும் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சார்பாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைலையலுவலக கட்டிடத்தொகுதியின் பாதுகாப்பு அமைச்சின் வழங்கல் கிளையிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் வழங்கலுக்கான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. 2023.07.05 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023.07.05 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரரின் சார்பாக சமுகமளிக்கும் பிரதிநிதிகள் நிறுவனத்திலிருந்து சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. விலைமனுக்கோரல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கால எல்லை வரையும் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் பின்வருமாறு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   i. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான எந்தவொரு வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
   ii. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   iii. மேலே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கானதாகவிருத்தல்.
   iv. விலைமனுக்கோரல் ஆவணங்களின் 9 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில், நிபந்தனையற்றதும் விண்ணப்பிக்கும் போது இலகுவாக பெறத்தக்கதான விலைமனுப் பிணையொன்றுடனும் 2023.07.05 ஆம் திகதியிலிருந்து 2023.11.01 ஆம் திகதியன்று வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

9. பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும் என்பதுடன் காலத்திற்கு காலம் வழங்கப்படும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் எந்தவொரு மாற்றங்களையும் மேற்கொள்வதற்கான உரிமையை கொள்வனவுக்காரர் கொண்டுள்ளார்.

10. விலைமனுக்களை திறக்கும் நாளுக்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனு திறத்தலில் பங்குபெறும் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற நபரானவர் அவரது பெயர், தேஅஅ/ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் I ஆம் பிரதான நிதியியல் அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர். தொலைநகல் இலக்கம்: 011-2433517.

11. மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்,

**கணக்காளர் (வழங்கல்),**<br>
**பாதுகாப்பு அமைச்சு,**<br>
**பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி,**<br>
**ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே.**

**தொலைபேசி: 0112430860-9 (நீடிப்பு: 10504)**<br>
**தொலைநகல் இலக்கம்: 011 2 433517**<br>
**மின்னஞ்சல்: modsupply@gmail.com**

**தலைவர்,**<br>
**அமைச்சு பெறுகைக் குழு,**<br>
**பாதுகாப்பு அமைச்சு.**